புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==================================================================

# நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் பெண்களின் வாழ்வியல் சூழல்

==================================================================

முனைவர்,ந.சோழன்,
உதவிப்பேராசிரியர் மற்றும் நெறியாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் மாவட்டம்.635601.

சே. இராஜேஸ்வரி.
322PHD228130TAM
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்.
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் மாவட்டம். 635601.

(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

## முன்னுரை

நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை பெரும்பாலும் எழுத்தறிவு இல்லாத நாட்டுப்புறத்து மக்களிடையே தொன்று தொட்டு வழங்குபவை. அவற்றை நாட்டுப்புற மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் நடக்கும் இன்ப துன்பங்களிலும் தொழில் செய்யும் போதும் களைப்பைப் போக்கும் நோக்கில் தம் உணர்வுகளைக் காட்டாற்று வெள்ளம் போல் வெளிப்படுத்தும் இலக்கிய வகையாகும். நாட்டுப்புறப் பாடல்களை ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் பாடினாலும், பெரும்பாலானகவே உள்ளன. பெண்களால் பாடப்பட்ட பாடல்களா. ஆண்கள் உடல் உழைப்பால் தன் வருமானத்தை ஈட்டச் செல்கின்றனர். கிராமத்துப்பெண்கள் குழந்தைகளையும், முதியோர்களையும் கவனித்துக்கொண்டும் குடும்பத்தை நிர்வகித்துக் கொண்டும் விவசாயம் சார்ந்த வேலைகளை செய்துகொண்டும் குடும்பத் தலைவியாகவே நாட்டுப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். இதனை,

**"ஏட்டிலே எழுதவில்லை**

**எழுதி நான் படிக்கவில்லை**

**வாயில் வந்தபடி**

**வகையுனே நான் படிப்பேன்"[1] (செட்டிநாட்டுத் தாலாட்டுப் பாடல்கள்)**

என்ற நாட்டுப்புறப் பாடலும் உணர்த்தி நிற்கின்றது. தாலாட்டுப் பாடல் முதல் ஒப்பாரிப் பாடல் வரை பெண்கள் எவ்வாறெல்லாம் தங்களின் வாழ்வியல் சூழலைப் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை ஆராயும்விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**பெண்களின் வாழ்வியல் சூழலே நாட்டுப்புறப்பாடல்களின்பிண்ணனி:**

நாட்டுப்புறப் பாடல்கள் அவை பாடப்படும் சூழல் அடிப்படையில் தோன்றியவை. தமிழ் நாட்டில் சங்க காலம் முதலே பெண்கள் குடும்பத்திலும், சமூகத்திலும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்தவளாகக் கருதப்பட்டாள். ஆணாதிக்கம் நிறைந்த காலக் கட்டங்களிலும் பெண்கள் போற்றப் பட்டதை இலக்கியங்களின் வழியே அறியலாம். உடல் வலிமையை வைத்து ஆண் உழைப்பதற்காகவும் பொருளிட்டவும், முடிவுகள் எடுப்பதிலும் முதன்மை பெற்றபோது, பெண்கள் குடும்பத்திலும் பிள்ளைகளைப் பேணிக் காப்பதிலும், வாழ்க்கையில் இன்ப துன்பங்களைத் தாங்கி நிற்கும் குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்தாள். இவ்வாறு வாழும் பெண்கள் தன் வாழ்வியல் சூழலை அடிப்படையாக வைத்து பாடப்பட்ட நாட்டுப்புறப் பாடல்கள் எண்ணிலடங்காதாவை பெண் குழந்தை பிறப்பு, வளர்ப்பு, பருவ மடைதல் வரன் பார்த்தல், மணம் முடிந்தல், காதல், கணவன்-மனைவி உறவு, சடங்குகள் - சீர்வரிசை, விழாக்கள், கணவணை இழத்தல், தாய் தந்தையை இழத்தல், வறுமை போன்ற பல்வேறு குடும்ப சூழலே நாட்டுப்புறப் பாடல்கள் பாடுவதற்கான பின்னனியாக அமைந்துள்ளது.

**பெண்கள் பாடும் தாலாட்டுப் பாடல்**

சங்க இலக்கியங்கள் வாய்மொழியாகப் பாடப்பட்டு பின்புசெய்யுள் வடிவில் எழுதப்பட்டவை, சான்றாக குறுந்தொகையில், "யாய் ஆகியளே விழவு முதலாட்டி" என்று சொல்வதின் மூலம்,பெண் தாயகிவிட்டாள், என்பது விழாவாக கொண்டாடப் பட்டதை நினைவுக்குக் கொண்டு வரும். நாட்டுப்புற இலக்கியங்களிலும் தாய்மையின் பெருமை தாலட்டுப் பாடல்களில் மிளிர்கின்றது. இதனை,

**"மலைமேல் தவமிருந்து எனக்கு மயிலேறி வந்தவனோ"[2]**

என்ற தாலாட்டுப் பாடல் தாய் தவமிருந்து கிடைத்த குழந்தை மயிலேறிவந்த முருகனைப்போல ' தெய்வம் கொடுத்த பரிசாக எண்ணிப் பாடினாள்.அத்தாய் குழந்தை பேறு அடையாத போது அவல உணர்ச்சியில். இதனை,

**"கிண்ணியில் போட்ட சோற்றைக்**

**கீறித்திண்ண பிள்ளை இல்லை**

**ஊருக்குப் போகையிலே உடன் வரவில்லை"[3] (நாட்டுப்புற இயல் ஆய்வு)**

பிள்ளை இல்லாத தாயின் வருத்தத்தை பாடலை மூலம் காண முடிகிறது . தாய்மாமன் பெருமை தாலாட்டுப் பாடல்களில் சிறப்பாகப் பாடப்படுகிறது. இதனை,

**"ஏலக்காய் காய்க்கும்**

**எழுநூறு பிஞ்சு விடும்**

**சாதிக்காய் காய்க்கும்**

**தாய்மாமன் எல்லையிலே"[4] (செட்டிநாட்டுத் தாலாட்டுப் பாடல்கள்)**

என்று பாடுவதிலிருந்து தாய்மாமன் நல்ல உள்ளத்தால் அவன் தொட்டது எல்லாம் துலங்கும் எனப்பாடுகிறாள். தாலாட்டுப் பாடல்களில் பெண்கள் குழந்தை இல்லா நிலையையும் மற்றும் தன் உடன் பிறந்தான் மீது கொண்ட பாசம் அவன் குடும்பத்தோடு வாழ்நாள் முழுவதும் ஒன்றே வாழ வேண்டும் என்ற விளைவு ஆகியவற்றை பல வகைகளில் வெளிப்படுத்துகிறாள்.

**பெண்கள் பாடும் சடங்குப் பாடல்கள்**

பெண் பருவமடையும் போது, அப்பெண்ணைக் கொண்டாடுவதற்காக, பூப்புனித நீராட்டுவிழா கொண்டப் படுகின்றது. தாய்மாமன் சீர்வரிசை கொண்டுவந்துக் கொடுப்பது, உறவினர்கள் அவள் துன்பப்படும் போது கூட நாங்கள் இருக்கிறோம் என்ற எண்ணத்தை விளைவிக்க பெண்மையைப் போற்றும் விதமாக இச்சடங்கு செய்யப்படுகின்றது. பெண் பருவமடைந்த செய்தியை வெளிபடுத்துகிறது., அதனை,

**"ராஜாத்தி சுபவேளையிலே**

**வெள்ளிக் கிழமையன்று**

**விடிரெண்டாம் சாமத்திலே**

**சித்திரை மாதம் சிறு முருங்கை பூத்தது போல்**

**வைகாசி மாதம் வாழைமரம் பூத்தது போல்**

**ஆனி மாதம் அவரைப் பூ பூத்தது போல்"[5]. (நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் தொகுதி 9)**

என்று ஒவ்வொரு மாதத்திற்கும் பூக்களின் பெயரைச் சொல்லி பெண் பருவம் அடைந்த செய்தியை தாய்மாமன் வீட்டிற்கு தெரியப்படுத்துகிறார்கள்.

**காதல் மற்றும் திருமண பாடல்கள்**

காதலர் உள்ளங்கள் இன்ப வானில் சிறகடிக்கும் போது இனிய பாடல்கள் பிறக்கின்றன. காதலனுக்காக ஏங்கி இருக்கும் பெண் காதலை மறக்க முடியாமல் பாடுவதாக அமைகின்றன. இதனை,

**"மறந்தாலும் மறந்திடுவேன்**

**மறந்து தின்னால் ஆறிடுவேன்**

**மறந்தே இருப்பதற்கு சண்டாளா**

**மதி இருக்கக் கூடுதில்லை"[6] (நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு)**

காதலனுக்காக ஏங்கி அழுவதையும் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

திருமண நேரங்களிலும் கிராமப்புறங்களில் பாடல்கள் பாடுகிறார்கள். இப்பாடல்கள் சடங்கு பாடல்கள் ஆகவும் கேலிப் பாடல்களாகவும் அமைகின்றன. திருமணத்தில் மணமக்களை வாழ்த்தி

பாடுவதுண்டு . திருமண வாழ்த்து பாடலில் பெண் பார்த்தது திருமண நடப்பு முறைகள் எல்லாம் வர்ணிக்கப்படும். இதனை,

**"வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்**
**மனங்குளிர வாழ்த்துகிறேன்**
**மாங்கல்யப் பெண்கள்**
**மனங்குளிர வாழ்த்துகிறேன்"[7] (நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு)**

என்ற பாடலடிகள் மூலமாக மணமக்களை வாழ்த்தி பெண்கள் பாடுகின்றனர். காதல் பாடல்களில் அவர்களின் துன்பத்தை வெளிப்படுத்தும் விதமான பாடல்களும். திருமண பாடல்களின் மூலம் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக அவர்களை வாழ்த்துவதும்.மேற்கண்ட பாடல்கள் மூலம் பெண்களின் வாழ்வியலை அறிய முடிகிறது.

**வளைகாப்பு அல்லதுசீமந்தம்**

பெண் கருவுற்றிருக்கும் பொழுது வளைகாப்பு என்னும் விழாவினை ஐந்தாவது மாதத்திலும் சீமந்தம் என்ற சடங்கினை ஆறாவது மாதத்திலும் நிகழ்த்துவர். இவ்விரு சடங்குகளிலும் பாடல்கள் பாடுவதுண்டு

**"சங்கரியும் லட்சுமியும் சரஸ்வதியாளும்**
**மங்கலமாய் பூஜை செய்தார் மன மகிழ்ந்து**
**மாசம் ஒன்று இரண்டு மூன்று மசக்கையும் செய்து**
**வளர்பிறையில் ஐந்தாம் மாதம் வளைகாப்பு செய்து**
**ஆறாம் மாதம் தசரதனார் சீமந்தம் செய்தார். (நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு)**

மகப்பேறடைந்த தாய்மார்கள் வந்திருந்து புதியதாக தாய்மை அடைந்திருக்கும் பெண்ணிற்கு வளையல்கள் அணிவதும், தாங்களும் அணிந்துக் கொள்வதும் நிகழும். கருவை சுமக்கும் பெண்களை கொண்டாடுவதும், பிரசவத்திற்கு நல்ல மனநிலையில் தயாராகவும், இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

**வேளாண்மை சூழல் பாடல்கள்**

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்பார்கள். வேலைப்பளுவானது உள்ளத்தைப் போலவே உடலையும் பாதிக்காது நாத்து நடும்போதும் களை எடுக்கும் போதும் பெண்கள் பாடுகின்றனர். நடவுப்பாடல், களையெடுப்புப்பாடல், அறுவடைப் பாடல், ஏற்றப்பாடல் போன்றவை, விவசாயம் செய்யும் சூழல் அடிப்படையில் பாடப்பட்டவை ஆகும். நடவு நடுவதற்கு முன்னால் பெண்கள் குலவை இட்டுப் பாடுவதும் உண்டு. அதனை,

**"வாராங்கோ வாராங்கோ**
**பண்ணாடி வாராங்கோ**
**பச்சைக் குடை பிடித்து**
**பயிர் பார்க்க வாராங்கோ.**
**கண்ணாடி வளையல் போட்டுக்**
**களையெடுக்க வந்த புள்ளே**
**கண்ணாடி மின்னலிலே**
**களையெடுப்பு பிந்துதடி"[9]**

**(நாட்டுப்புறவியல்)**

களை எடுக்கும் போது கையில் போட்டிருக்கும் வளையல் ஆனது வெயில் பட்டு மின்னுவதாகவும் அதனால் களை எடுக்கும் வேலை பாதிப்பதாகவும் இப்பாடல் வழி அறிய முடிகிறது.

**பெண்கள் பாடும் ஒப்பாரி:**

பழமையான வாய்மொழி வழக்காறுகளுள் ஒப்பாரியும் ஒன்று.இறந்தவரை நினைத்து அவர்மேல் பாடப்படும் பாடலே ஒப்பாரி என்பார். பெண்களுக்கு உரிய வழக்காறு. இதன் மூலம் பெண் ஆழ்ந்ததுயரத்தை வெளியிடுகிறாள். தாய் தந்தை கணவன் அண்ணன் தம்பி முதலிய ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒப்பாரி பாடல்களை பெண்கள் பாடுகின்றனர். இது குறித்து பா, ரா, சுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகிறார். 'ஒரு பெண் சந்தர்ப்பத்திற்கு தகுந்த சொற்களைத் தெரிந்தெடுத்துப் பாடவில்லையென்றால் அப்பொருத்தமின்மையை பற்றி தம்முள் சுட்டிக்காட்டி முறுவலிப்பார்கள் தே.லூர்து நாட்டார் வழக்காற்றியல் பக்கம்'186.தன்னுடைய துயரத்தை தகுந்த சொற்களால் வெளிப்படுத்த வேண்டும் என்பதை அவர் கூறியிருப்பது பெண்களுக்கு இயற்கையாகவே பாடும் திறன் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

தன் கணவனை, இழந்தபோதும், தாய், தந்தையரை இழந்த போதும் கையற்ற நிலையில் பெண்கள் ஒப்பாரி பாடுகின்றனர்.கணவனை இழந்த பெண்ணொருத்தி, அதனை,

**"ஆத்தங்கரை மண்ணெடுத்து எனக்கு**
**அரும்பு வச்சி தாலிபண்ணி நான்அவசரமா**
**அறுப்பேது எனக்கு ஒரு**
**ஆசாரியும் சொல்லலியே"[10] (களஆய்வுப் பாடல்)**

என்று அழுகிறாள் 'தாய்தந்தைக்குப் பின்தாய்வீட்டில்பெண்ணிக்கு,அரவணைப்பு இல்லை உடன் பிறந்தவர்களிடம் அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் பெண்பாடும் ஒப்பாரிப்பாய்,

**"வாசலிலே வாழைமரம்**
**வகைவகையா காய்க்கும் மரம்**
**வகைக் கெட்ட அண்ணன் மாரே**
**எனக்கு வரிசையிட அஞ்சு ராங்கோ?"[11] (களஆய்வுப் பாடல்)**

என்று பாடுவது பெண்களின் மனக்குமுறல்களைக் காட்டுகின்றது. பெண்கள் உறவுகளைச்சார்ந்தே வாழும் நிலை நம் சமூகத்தில் உள்ளது.என்பதை இப்பாடலின் வழி அறிந்துக்கொள்ளமுடிகிறது.

**முடிவுரை:**

நாட்டுப்புறப் பாடல்கள் பெண்களின் வாழ்வியல் சூழல் அடிப்படையில் எவ்வாறு தோன்றியது என்பதை அவர்கள்பாடும் நாட்டுப்புறப் பாடல்களின் வாயிலாக அறியமுடிகிறது. தங்களுடைய குடும்பச் சூழலையும், சமூகச் சூழலையும் தங்கள் பால்களில் வெளிப்படுத்தியுள்ளதை இக்கட்டுரையில் காணமுடிகிறது.மேலும் தாய்மையின் பெருமையையும் தாய்மாமன் சிறப்பையும் சடங்குப் பாடல்கள் மூலம் பூப்படைந்த பெண்ணிற்கான சடங்கு முறைகளையும் காதல் மற்றும் திருமணப் பாடல்கள்மூலம் வலியையும் வாழ்த்துகளையும், ஒப்பாரிப் பாடல்களில் பெண்களின் மனக்குமுறலையும் இவ்வகைப்

பாடல்கள் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் முக்கியத்துவத்தைக் காலந்தோறும் உலகிற்கு எடுத்துரைக்கும் என்பதில் ஐயமில்லை.

**துணை நூற்பட்டியல்**


1. நாகம்மை. சு ,செட்டிநாட்டுத் தாலாட்டுப் பாடல்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அம்பத்தூர் சென்னை 600 -098
2. நாகம்மை. சு ,செட்டிநாட்டுத் தாலாட்டுப் பாடல்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அம்பத்தூர் சென்னை 600 -098
3. சக்திவேல். சு , முனைவர் நாட்டுப்புற இயல் ஆய்வு மணிவாசகர் பதிப்பகம் பாரிமுனை சென்னை.600108
4. நாகம்மை. சு ,செட்டிநாட்டுத் தாலாட்டுப் பாடல்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அம்பத்தூர் சென்னை 600 -098
5. இராமநாதன். ஆறு, முனைவர்.நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் தொகுதி 9 மெய்யப்பன் தமிழாய்வகம் சிதம்பரம்-608001
6. அழகப்பன். ஆறு ,முனைவர் நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு பாரிநிலையம் சென்னை 600108
7. அழகப்பன். ஆறு ,முனைவர் நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு பாரிநிலையம் சென்னை 600108
8. அழகப்பன். ஆறு ,முனைவர் நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு பாரிநிலையம் சென்னை 600108
9. சண்முகசுந்தரம். சு.பேரா, நாட்டுப்புறவியல், காவ்யா ,16,இரண்டாம் குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
10. களஆய்வுப் பாடல்- கிருஷ்ணவேணி பெத்தூர்.